T. 1659.

# இன்ரேகை.

ஆக்கியோர்:

பண்டித இராமசுப்பிரமணிய நாவலர்.

செந்தமிழ் நிலையம்,
பதுமநாபபுரம்,
தக்கலை.
1947

# இன்ெருகை.

ஆக்கியோர்:

**பண்டித இராமசுப்பிரமணிய நாவலர்,**
*மதுரைத் தமிழ்ச்சங்கத்து அங்கத்தினர்,*
*தலைவர், தமிழ் இலக்கியக் கழகம், தமிழ்த் தேர்வாளர்,*
*தக்கலை.*

செந்தமிழ் நிலையம்,
*பதுமநாபபுரம், தக்கலை, தென் திருவாங்கூர்.*

பதிப்புரிமை] [விலை அணு 4

1946

# முத்தமிழ்வாணர்.

சங்கச் சான்றோராகிய கபிலர் பரணர் நக்கீரர் என்னும் முத்தமிழ்ப் புலவரது இனிய வரலாறுகள் இதன்கண் உயரிய நடையில் தக்க மேற்கோள்களுடன் சுவை கமழ எழுதப்பெற்றுள்ளன. தமிழாராய்ச்சித்துறை புகுந்தார்க்கும் தமிழ் மாணவர்க்கும் இன்றியமையாதது. பண்டைத் தமிழ்நலம் பேணுவார் பேணத்தக்கது.

விலை அணா 8.

10 அணாத் தபால்தலை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். இந்நூலை வாங்குவோர்க்கு முருகன் தோத்திரம் இலவசமாக அளிக்கப்படும்.

தலைவர், செந்தமிழ் நிலையம்,

பதுமநாபபுரம்,

தக்கலை, S.I.

# இன்றொகை.

## கடவுள் வணக்கம்.

குறள்வெண் செந்துறை.

இன்றொகை யடியார் நின்றுமுன் னேத்த
மன்றொளி ரிறையடி வணங்குது மகிழ்ந்தே.

## நூல்.

### அறவியல்.

இல்லறம் புரிந்தபி னல்லற நாடு. 1
சொல்லற மனைத்து மில்லறத் தேய்க. 2
இல்லற மின்றி யெழும்பய னின்றே. 3
கற்புடை மனையொடு பொற்பமைந் தொழுகுக. 4
ஒண்டமிழ்க் கற்பிலர் பெண்டிரு மல்லர். 5
கற்பெனப் படுவது கற்ற நெறிவரும்
சொற்பிற ழாத தூய வொழுக்கம். 6
வளமும் வழக்கும் வகுத்துடன் வாழ்க. 7
அளவில் வாழ்க்கை யழிதர லுண்மை. 8
மக்கட் பேறே மங்கல மனைக்கு. 9
மக்க ளில்லா மனையறஞ் சிறவா. 10
மகனே மனைக்கு மணியென லாகும். 11

மக்கட் சொல்லே மாண்செவிக் கமுதம். 12
அன்புடை யாரை யருங்கிளை யென்ப. 13
அன்பில் வாழ்க்கை யழிமர மற்றே. 14
அன்பி லுடல மென்பின் கூடே. 15
விருந்தின் வாழ்க்கை யருந்தவப் பயனே. 16
விருந்திருந் தோம்பல் வேள்வி யென்ப. 17
விருந்தின் மிக்க பெரிருந்திரு வில்லை. 18
கொடுப்பதி னின்சொல் விழுப்பம் பயக்கும். 19
இன்சொல் வென்றிக் கியைந்த கருவி. 20
இன்சொற் கூற்ற மெவற்றினு நன்று. 21
இன்மொழி தனக்கோ ரெதிர்மொழி யில்லை. 22
இன்சொ லின்ப மெய்துவ தெளிதே. 23
இன்பம ருள்ளத் தின்சொற் பிறக்கும். 24
வன்சொல் வழக்கு வளங்கெடுத் திடுமே. 25
மாண்பொருள் விழைந்தார் வன்சொல்
வழங்கார். 26
வன்மொழி வழக்குப் பன்மயற் படுக்கும். 27
கடுஞ்சொற் கூற்றங் கடுவினுந் தீதே. 28
இன்னா முகந்தரு மின்னா மொழியே. 29
இன்சொ லரிதன் றெனினுஞ் சில்லோர்
வன்சொல் லின்றி வாழ்வது மரிதே. 30
ஆற்றார்க் கொன்றீங் களிப்பது கடனே. 31
ஈந்து வறுமை யெய்தினு நன்றே. 32
ஈந்துறு முவகைக் கிணையொன் றில்லை. 33
ஈகையின் மிக்க வெழிலற மில்லை. 34
ஈந்துறு மின்பம் வேந்தினு மின்றே. 35
ஈகையி னுவகை யேய்ந்தவர் சிலரே. 36
ஈயார் செல்வம் தீயா ருடைமை. 37
உறவுக் கீயா உடைமையும் பாழே. 38

இறைத்தொறுங் கிணறூற் றுறைத்திடு மென்ப. 39
ஈயாச்செல்வம் எற்றுக் குதவும். 40
ஈட்டிய செல்வ மீகையிற் சிறக்கும். 41
ஈவதன் பெருமை யீகுநர் வரைத்தே. 42
ஆற்றுந் தவமு மருங்கொடைக் கொவ்வா. 43
ஈயா திறந்தவர்க் கிரும்பொருள் பாழே. 44
இறந்தவ ரென்பா ரீயா திருந்தார்
ஈயா திறந்தவ ரெத்தகை யோரே. 45
உயிரீந் திடினு முயர்வல தின்றே. 46
ஈகைக் கின்னா தியல்பொரு ளென்றிலை. 47
புரையறக் கொடுக்கும் புகழ்புக ழென்ப
வரைந்து கொடுப்பினும் வழுவா காதே. 48
கைம்மா றில்லாக் கடப்பா டாற்றல். 49
எதிர்குறித் தீவ தீகையு மன்றே 50
விற்றுட லுதவினு மற்றமொன் றில்லை. 51
உதவி யாற்ற லுடம்பின் பயனே. 52
உற்றிடத் துதவா ருறவி னரல்லர். 53
உதவியி னுலக முய்யு மாறே. 54
நன்றிகொல் வாழ்வு நரகினு மின்னாது. 55
நன்றி மறப்பதெந் நலமுங் கெடுக்கும். 56
நன்றி மறவா நல்லற மறமே. 57
அறிவின் மிக்கது நன்றி யறிவே. 58
நற்றுணை யாவது நன்றிமற வாமை. 59
செப்பமும் செறிவு மொப்பக் கொளாஅல். 60
நயனில் வாழ்வு பயனில் வாழ்வே. 61
தகுதியின் மிக்க தகுதி யில்லை. 62
செப்பிற் செப்பத் தொப்பதொன் றில்லை. 63
நடுவு நிலைவிடிற் கெடுநிலை யெளிதே. 64
ஒழுக்க மொன்றே யுயர்குல மென்ப. 65

குலப்புணர்ப் பெல்லா நிலப்புணர்ப் பென்ப. 66
பிறப்பிடை வேற்றுமை பேசிட வேண்டா
சிறப்பிடை வேற்றுமை யொழுக்கம் தெரிக்கும். 67
ஒழுக்க மின்றேல் விழுப்ப மின்றே. 68
ஒழுக்க மென்ப துலக நெறியே. 69
இடுக்கண் பயப்ப திழுக்க மென்ப. 70
மக்கட் பயனீண் டொழுக்க வாய்ப்பே. 71
ஒழுக்கமில் கல்வி யிழுக்குடைத் தாகும். 72
ஒழுக்கமு முலகியற் கொப்ப வழங்கும். 73
பிறனில் விழைதல் அறனெனத் தகாது. 74
மறுமண வாழ்க்கை வழுவிய தொன்றே. 75
வழுவி யமைந்தவும் வகுத்தனர் சான்றோர். 76
வழுவின வனைத்தும் வழுவியமையா. 77
அழுக்கறுத் தாக்குந ரழிதலைப் படுவர். 78
அழுக்கா றதுவே இழுக்கா றென்ப. 79
அரும்பொருள் முழுது மழுக்கா றழிக்கும். 80
அழுக்கா றுடையா னலகையு மல்லன். 81
பிறன்பொருள் வெஃகிற் றன்பொருள் பிழைக்கும். 82
நச்சிய வாழ்க்கை பிச்சையிற் புகுத்தும். 83
பிறன்பொருள் வேட்கை யறன்பொரு ளன்று. 84
புறங்கூற் றொன்றே யறங்கூறு படுக்கும். 85
கொடுமையிற் கொடுமை கொடும்பழிக் கூற்றம். 86
பழியுரைத் துய்ப்போர் பதரெனப் படுவோர். 87
பதரும் பயன்படும் பழிபய னன்றே. 88
பாற்பழி யுரைப்பார் நாற்பொரு ளிழந்தார். 89
பயனில கூறுவோன் பயனிலி யென்ப. 90
பயனில் கூற்றம் பதடிக் கியல்பே. 91
சொற்பய னில்லா ரெப்பயன் படுவார்? 92
ஒன்றிற் பயவா ரொன்றினும் பயவார். 93

பண்பிற் குறும்பொருள் பயந்தில வாகில்
பண்படு சொல்லும் பயனில வாமே. 94
பயனில மொழியார் நயனுணர் வாரே. 95
தீயன செய்யிற் றீயன பயனே. 96
தமக்குறு துன்பந் தாமறிந் தொழுகல். 97
குலத்திற் பிறந்தவர் கொடியன செய்யார். 98
அருளுடை யாரை யந்தண ரென்ப. 99
அருள்பொரு ளாகு மறிவுடை யார்க்கே. 100
அறமிரண் டினுக்கு மருண்முத லென்ப. 101
அருளிலர் கருமயக் கறுத்தவ ரல்லர். 102
அருளில் பிறப்போர் ரரும்பேய்ப் பிறப்பே. 103
விலங்கின் வேற்றுமை யருளின் விளங்கும். 104
அன்பு மருளு மமைந்தது வாழ்க்கை. 105
ஊனுண வொழிக்கு முயர்வுயர் வாமே. 106
உணவகை நுட்ப மியற்கையி னுணர்க. 107
விலங்கினு மக்கள் வேறெனி னூனே
விலங்குவ தாகு மிலங்கிய வறனே. 108
விலங்கினு மூனே வெறுத்தன வுளவே. 109
படிற்றினர்க் குள்ளம் பழியுறை யென்ப. 110
வஞ்சக மொளிப்பினு நெஞ்சக மலைக்கும். 111
வஞ்சித் துலகினில் வாழ்ந்தவ ரில்லை. 112
புகழின் விளங்கும் புத்துயிர் வாழ்க்கை. 113
இசையில ரெல்லாம் வசையுள ரென்ப. 114
மக்கட் பிறப்பு மாண்புக ழனைத்தே. 115
புகழு நன்றியும் பொருந்திய பயனே. 116
இகழும் புகழு மியல்குணத் தாகும். 117
வாழ்விடை யூதியம் வான்புக ழொன்றே. 118
ஊழெனக் கருதி யுயர்வகன் றொழுகார். 119
ஊழு மொருவ னுழைப்பின் பயனே. 120

## பொருளியல்.

செங்கோ லின்றிச் செயலீங் கில்லை. 1
இழிவன நீக்கி யின்குடி யோம்பல். 2
அறநெறி யாளு மரசனுந் தெய்வம். 3
கொடுங்கோன் மன்னன் கூற்றினுங் கொடியன். 4
கொடுங்கோ லரச னடுங்கோ லலகை. 5
கோல்பிழைத் திடுமேற் குடியும் பிழைக்கும். 6
ஒறுப்பது வரம்பி னுண்ணிலைத் தென்ப. 7
உதவியின் வாரா ரொறுப்பிற் குரியர். 8
கொலைஞரைக் கோறல் கொடுங்கோ லன்று. 9
கள்வரை ஒறுத்தல் கடுங்கோ லன்று. 10
தீயரைச் செகுப்பது செங்கோன் முறைமை. 11
ஒறுப்பி னல்லா லுறுநெறி வாரார்
ஒறுத்திட லல்லரைப் பொறுப்பது கடனே. 12
கொல்பவர் தம்மையு நல்வழி நிறுத்திப்
புல்வகை யொறுப்பினும் போற்றப் படுமே. 13
உறவும் பகையு மொறுப்பிற் கில்லை. 14
அமைச்சுமுத லாறு மமைப்பவ னரசன். 15
சொல்வலி யமைச்சர்க் கொல்வலன் பயக்கும். 16
மொழியறி யாதோன் முறைசெய லில்லை. 17
தொழிலும் பயனுந் தொகுத்துண ரொருவன்
பழியறு மமைச்செனப் பகர்ந்திடலாகும். 18
ஆட்சியொன் றகற்றி யரசற் குற்றன
சூழ்ச்சியிற் புரியுந் துணைவ னமைச்சன். 19
குடிநலம் பேணுங் கொட்பின னமைச்சன். 20
ஆக்கமும் கேடு மறிபவ னமைச்சன். 21
அமைச்சிலா வரசிய லறிவி லுயிரே. 22
உயிரு மரசற் குதவுந னமைச்சன். 23

உறுவ துரைப்பா னுழையிருப் பவனே. 24
ஊக்கமு மூற்றமு முதவுந னமைச்சன். 25
அரசிய லனைத்து முணர்பவ னமைச்சன். 26
படைவகை யின்றேற் பயில்புக ழின்று. 27
படைத்தகை விளங்கின் பகைவலி யொடுங்கும். 28
வருபடை யஞ்சா மறமற மென்ப. 29
உயிர்கொடுத் துயர்புக ழுறுபவன் வீரன். 30
அஞ்சாமை வேண்டு மரும்படை யென்ப. 31
ஆயிரங் காக்கைக் கோர்கல் லமையும். 32
வேய்மழி தருமேல் வேறுபகை வேண்டா. 33
கைப்படை யேனும் வழுக்கிடு மென்ப. 34
பகையினை வெல்வது படுபொரு ளென்ப. 35
உற்றுழிப் பகைமற் றொழிப்பது திறலே. 36
வெகுளியி னுட்பகை விளைப்பன பலவே. 37
உட்பகை யாயி னுடனொழித் தோம்பல். 38
நெருப்பினை மடியி னிறுப்பவ ரில்லை. 39
கூடினுங் கூடா கோளி லுட்பகை. 40
நட்படுத் தறுக்க உட்பகை முற்றும். 41
பகையிற் பகையைப் பகுப்பது பண்பு. 42
பகையுந் தலைவரி னகையொடு நட்க. 43
பாம்பின் பல்லள வெண்ணிப் பாரேல். 44
இடனின் றூயி னெதுவு மின்று. 45
இடமறிந் தன்றி யியல்பகை முனையேல். 46
இடனுத வுவது படையுத வாதே. 47
இடநோக் கானே லிறுதி தலைவரும். 48
முதலை நடவா முதுகரை யகத்து. 49
கால்வன் றேருங் கடலிடை யோடா. 50
மரக்கல மோடா மண்ணிடை யென்ப. 51
இடனுங் காலமு மியைத்திடு மாற்றல். 52

உரிய காலத் தரியது மாகும். 53
காலந் தவறிற் கருதிய தவறும். 54
ஒண்மையு மறிவு மொழுக்கும் பேணல். 55
எட்டின் பாகங் கூட்டிற் குதவா. 56
கல்வி யின்றி வெல்வினை யில்லை. 57
கல்விச் செல்வம் காப்பது கடனே. 58
கல்விக் கொத்த வல்லமை யில்லை. 59
மறவாக் கல்வி இறவாச் செல்வம். 60
மறந்தன வெல்லா மறிந்தன வல்ல. 61
மறப்பினுங் கல்வி வருந்துணை யொருவழி. 62
கற்றது கொண்டு கழிவரம் பேறேல். 63
கல்விச் செருக்குச் செல்வங் கெடுக்கும். 64
ஒருக்குங் கல்வி செருக்கி நில்லாது. 65
நுணங்கிய கல்வி வணங்கிடச் செய்யும். 66
அரும்பொரு ளுணரான் கற்றவ னல்லன். 67
கலைஞர்க் கில்லை யலமரல் வருத்தம். 68
கல்விபோல் வெல்லுங் கருவியொன் றில்லை. 69
கல்விக் குரியோன் களிமக னல்லன். 70
கற்ற கல்விக் குற்ற தொழுக்கம். 71
கல்விப் பயன்மெய்க் கடவுளை யுணர்தல். 72
பொருளினு மொழியினும் புலவ ரமரர். 73
இடையறக் கற்பின் மடநனி யிகக்கும். 74
கல்விச் செல்வம் கடைவழித் துணையே. 75
கசடறு கல்வி கவின்பெறு செல்வம். 76
மூன்றறக் கற்ப தான்றமெய்க் கல்வி. 77
பழமொழி யுணரான் வழிமுறை யுணரான். 78
மொழிவழு நீங்கிற் பழிதழு வாதே. 79
வேண்டிய புகழை விளக்குங் கல்வி. 80
அருமொழிப் புலவ னரசனிற் பெரியன். 81

அவைக்கு விளக்க மணிபுல வாணர். 82
கற்றலிற் கேட்டல் கைகொடுத் திடுமே. 83
கல்வியுங் கேள்வியு செல்வமென் றிரண்டே. 84
கேள்வியுங் கல்விப் பயனெனக் கிளத்தல். 85
கலைவறு நூற்பொருள் கல்லா ரெனினும்
கிலைபொருள் பிறர்வாய்க் கேட்பது நன்றே. 86
கேள்விச் செல்வங் கேட்பிற் பயக்கும். 87
அறிவுடை யாரீண் டனைத்து முடையார். 88
வறுமை யென்ப தறிவில் லாமை. 89
அறிவெனப் படுவ துற்றிட த்தூன் றுகோல். 90
அறிவுடை யாள் னரசனிற் பெரியன். 91
அறிஞரை யின்றி யகலிட நடவா. 92
அறிவிலர்க் கில்லை யகமும் புறமும். 93
அறிவுடை யார்கட் டாகு முலகே. 94
அரச னு மறிவுடை யவர்மொழிக் கடங்கும். 95
அறிவெனப் படுவது நெறி நிலை யுணர்தல். 96
அழிவன செய்ய வறிவறி வென்ப. 97
அறிவுகை விட்டிடி னழிவு தலைவரும். 98
அறிவின் மிக்கதோ ராக்க மில்லை. 99
உற்றறி வின்றே லுறுகலை பயவா. 100
கற்று மறியான் கசட னென்ப. 101
புலவரும் புலவரைப் போற்றுவ ரென்ப. 102
இலகுமை கண்ணினுக் கெழுதிடல் போல
உலகிடை யறிவோ ருறைகுவ ரென்க. 103
அவையஞ் சொருவற் கறிவு பயவாது. 104
அஞ்சி யுரையா னறிவிலி யொக்கும். 105
கல்விக் குறுபயன் கசடற மொழிதல். 106
அவையஞ் சுபவர்க் கருங்கலை பொறையே. 107

அவையஞ் சொருவ னருங்கலை யாய்தல்
சுவையஞ் சொருவன் துவைசெய லொக்கும். 108
அவையொன் றுரையா னருங்கலைப் பேதை. 109
பயவாக் கல்வி யுதவாச் செல்வம். 110
அவையறி யாதான் கற்றவ னல்லன். 111
அவையிடை வெல்வோ னாரினும் பெரியன். 112
வழிமுறை கல்லான் வழக்கினில் வெல்லான். 113
தேறுந் துணையும் வேறுற வாய்தல். 114
தேறித் துணிதல் திறனெனப் படுமே. 115
தேறாச் செய்கை தீராத் துயர்தரும். 116
தெளிவி லதனைச் செய்வது மடமை. 117
துணிவிற் றுணிக துணியும் பொருளே. 118
துணிந்தபி னையந் துயர்ப்படுத் திடுமே. 119
துணிவுந் துணிவிற் றுணியற் பாற்றே. 120
ஆள்வினை யின்றே லரும்பொரு ளின்று. 121
முயற்சியின் மிக்க மொய்ம்பிவ ணில்லை. 122
உழைப்பின் மிக்க உயர்வு மில்லை. 123
உயர்பொரு ளெல்லா முழைப்பின் பயனே. 124
ஊழிற் கஞ்சி முயற்சி யொழியேல். 125
முயற்சியின் முடியா முதுபொரு ளில்லை. 126
முயற்சியி லொருவ னுயர்ச்சி யடையான். 127
தந்தொழி லருமை தாமே யுணர்ப. 128
முயன்றது முடியா தாயினு முயல்க. 129
விடாது முயறல் கெடாது பயக்கும். 130
விடாஅ முயற்சி கெடாஅ உயர்ச்சி. 131
முயன்றவ ரல்லதிங் கயின்றவ ரில்லை. 132
தோற்பினு முயல்வது தொகுபுகழ் பயக்கும். 133
பயப்பது தோற்பின் வென்றியின் பயனே. 134
தோற்பன தொடராத் துணிவுமுற் கொள்க. 135

எறும்பு மெண்ணி னியல்வன வீட்டும். 136
ஒத்துழைப் பதுவே யுயர்விற் கியனெறி. 137
உறுபொருள் முற்று மொற்றுமை யுதவும். 138
இடும்பைக் கொல்கா இயல்பு நன்றே. 139
இடுக்க ணஞ்சா ஏற்ற மினிதே. 140
இடும்பைக் கிடும்பை படுப்பவ னுரவோன். 141
இடும்பைக் கழியார் கடந்தெரிந் துய்வார். 142
இடும்பை யியல்பென் றுழைப்பி னிறங்குக. 143
இடும்பையு மின்பமு முள்ளத் தியற்கை. 144
இடுக்கணின் றெய்தி னியாரென் னெய்தார்? 145
துன்புற் றுறுவது நன்பொற் செல்வம். 146
துன்பமுந் துய்த்துத் துரப்பது வன்மை. 147
இன்பத்து மகிழ்ந்தோர் துன்பத்து வருந்தார். 148
சொல்வலி குறிப்புணர் வொல்வகை பேணல். 149
அம்பி துணையா வருங்கரை யேறுப. 150
பொருள்பொரு ளென்ப பொருளுரை யாளர்? 151
நல்கூர்ந் தவர்க்கு நாநல மில்லை. 152
உடைமையு மின்மையு முலகுணர்ந்
தொழுகும். 153
பேதையும் வல்லோன் பெரும்பொருள்
பெறினே. 154
உடையவர் தம்மை யுலகுகை விடாது. 155
இல்லவர் தம்மை இயைபவ ரில்லை. 156
நிரப்பினர் கல்வி நீறுடை நெருப்பு. 157
மடமையு மெண்மையு முடைமை
யொழிக்கும். 158
கற்றவ ரெல்லாம் பெற்றவர் தலைக்கடை. 159
உடையவர்க் கில்லை யுரைசெல் லாமை. 160
தெய்வமு மஞ்சுந் திருவுடை யார்க்கே. 161

திருவிற் சிறந்த திறலீங் கில்லை. 162
உடைமை யொன்றே உலக மாளும். 163
பொய்தரு நட்பின் பொருபகை நன்று. 164
அறிந்தபி னட்ப தறிவின் பயனே. 165
நட்டபிற் குற்ற நாடுதல் தீது. 166
நட்டபிற் பிரியார் நற்குலச் சான்றோர். 167
நட்டவர் மாறி னலிவது பயனே. 168
நட்பெனப் படுவது நலிதகை யின்மை. 169
ஆற்று நட்புப் போற்று விடுக. 170
ஒல்லா னட்பி னுளஞ்செல வோம்புக. 171
நாடிய நட்பு வீடியல் துணையே. 172
அறநெறி யூக்கா நட்பவ மாமே. 173
நகைக்கு நட்புப் பகைக்கும் பின்னர். 174
பழமையும் பண்புங் கெழுதகைப் பால. 175
பயன்படு நட்பு நயன்படு செல்வம். 176
வறுமைக் கிரக்கஞ் சிறிது மில்லை. 177
பல்வகை நலனும் நல்குர வொழிக்கும். 178
வறியவர்க் கில்லை வழக்கு மொழுக்கும். 179
வறியவர் தம்மைச் சிறியரு மிகழ்வர். 180
வறுமைப் பிணிபோல் வருத்துவ தில்லை. 181
இல்லா ருள்ளா ருள்ளா ரில்லார். 182
கெட்டவர்க் கில்லை கிளையு முறவும். 183
வறியவர்க் கிப்புவி வாய்ப்புடைத் தன்றே. 184
அறிவும் பெருமையும் வறுமையி னகலும். 185
இரப்ப லென்னினு மிழுக்கதி னின்றே. 186
இரந்துயிர் வாழ்தலி னிறப்பது நன்று. 187
உழையா திரப்போ னுயிர்பொரு ளன்று. 188
நீத்தா ரிரப்பினு நெடும்பழி யியல்பே. 189
எளிதி னெய்தினு மிரவிழுக் குடைத்தே. 190

உரியன வேனு மிரவு சாலாது. 191
ஏற்ற துவவா விரவலர் யாரே? 192
கயவர்க் கில்லை காட்டிய வொழுக்கம். 193
படர்ந்துழிச் செல்லும் பயவாக் கயமை. 194
கயவர் கூட்டம் கடும்படர் வன்பிணி. 195
கடுந்தொழில் வழக்கங் கயமை யஞ்சாது. 196
இன்சொற் கொள்ளா திடர்தரு கயமை. 197
கருவிக் கடங்குங் கயமைக் கூட்டம். 198
மக்கட் டோற்றங் கயமை மாண்பே. 199
கயவரு நல்லவர் கரந்தகன் றிடினே. 200
பெரியரைப் பேணிற் பருவர லின்று. 201
பெரியரைப் பிழைத்தல் பேதைமை யாகும். 202
பெரியரை யின்றிப் பீடுபெற லின்று. 203
மேதகை யார்துணை யூதியம் பயக்கும். 204
உற்றிடத் துதவுந ருறுதவப் பெரியர். 205
தோன்றிய வுலகஞ் சான்றவர் நெறித்தே. 206
குடியும் பெருமையுங் குறைவின் றோம்பல். 207
நயவாச் செல்வம் பயவாக் களரே. 208
குடிப்பிறப் பாளர் குன்றுவ புரியார். 209
கல்வியு மொழுக்குங் கசடற வோம்புக. 210
ஒறுப்பினு முதவ லூதியம் பயக்கும். 211
களவும் பொய்ம்மையுங் கடிதல் கடனே. 212
கள்ளுஞ் சூதுங் கடிவது கடனே. 213
அடுப்பது காட்டிக் கெடுப்பது சூதே. 214
சூதினர்க் கில்லை மேதக வாண்மை. 215
உறுபொருள் கருதியுளபொரு ளிழந்து.
வறுமையி னுழ்வர் மாண்பழிச் சூதர். 216
ஆயம் பிடித்திடிற் றேயம் பழிக்கும். 217
வெகுளி யுடையார் விழுப்பய மெய்தார். 218

சினம்பழி பாவஞ் சேர்த்துணர் வழிக்கும். 219
ந்னிசினங் கொடிய நரகிடை யழுத்தும். 220
சினமில் லவர்க்கோ ரினமுல கென்ப. 221
சினமறஞ் சிதைக்குந் தீயென லாகும். 222
சினமுஞ் செற்றமு மினமழித் தலைக்கும். 223
இன்னா செய்யி னின்னா பயனே. 224
கொடுவினை யாளர் கூற்றினுங் கொடியர். 225
முற்செய் தீவினை பிற்பழி றருமே. 226
இன்பமுந் துன்பமுந் தம்பய னிகவா. 227
தந்துயர் கருதுநர் வெந்துயர் புரியார். 228
பிறர்தம வின்பம் பேணுத லாண்மை. 229
பிறர்க்குத வுதலே பெரியவர்க் கியற்கை. 230
உதவி யழியா தாயிர் நிலை யின்றே. 231
வருவன துன்பந் தனக்கென வகுக்க. 232
இடும்பைக் குறுகல னிவ்வுடம் பென்க. 233
வருதுய ராற்றுவோன் வல்லவ னவன். 234
உலகிய லின்ப முறுதுயர்க் கிடரே. 235
ஆருயிர் கொல்லா வறமற மென்ப. 236
கொலையற மென்னுங் கொடியரைக் கூடேல். 237
கருவினை யாகுந் திருவினர்க் கில்லை. 238
கொலைஞர்க் கில்லை குருவுந் திருவும். 239
கொலைபுரி வாழ்விற் கொடுநர கினிதே. 240
தன்னுயிர் போற்பிற மன்னுயிர் பேணுக. 241
தொல்லுயிர் செகுத்தூண் சுவைப்பதுங்
குற்றம். 242
மைசெகுத் தணங்கு வழிபடல் குற்றம். 243
பலிபெறு கடவுள் பயனுத வாதே. 244
வரைவின் மகளிர் வரைதலுங் குற்றம். 245
மிகுபொருண் மீதே விலைமக ளார்வம். 247

பொருண்மகட் புணர்ச்சி பொருண்மயக் காகும். 247
நெர்ய்விலை மாதர் நோய்க்கிட ஞவர். 248
கூலிக் குழைப்பா ருரைகொளல் குற்றம். 249
அறிவன வறியா வாண்மையுங் குற்றம். 250

---

## இன்பவியல்.

---

காத லுயிரின் கலப்பென மொழிப. 1
களவு நிகழின் வரைதல் கடனே. 2
இயலும் புணர்ச்சி இம்மைப் பயனே. 3
புணர்ச்சியின் மகிழ்தல் புணர்ப்பின் பயனே. 4
இன்ப மில்லார்க் கிருமையு மில்லை. 5
பலமா ஞத புணர்ச்சி விழலே. 6
ஏழா மிடந்தொட் டெய்தா ரின்பம். 7
மாதர் மகிழ்தர மலிவது கலவி. 8
கலவி யின்பம் புலவியில் விளங்கும். 9
புலவி சிறப்பிற் கலவி சிறக்கும். 10
புலவாக் கலவி சுவையாப் புகவே. 11
கலவியும் புலவியுங் காமக் கினிய. 12
ஊடலும் புலவியுந் துனியு முணரல். 13
துனிமற் றிகப்பின் துன்பம் பயக்கும். 14
புலவிகைம் மிகுப்பின் புணர்ச்சி பயவா. 15
உணர்ப்பின் வாரா ஊடலுந் துன்பம். 16
உணராக் காலை ஊடலுந் தகவே. 17
இருதலை யூட லின்ஞ தாகும். 18
காமக் கில்லை சேமச் செய்கை. 19

காதலுங் காமமுங் கலவிக் கிணைதுணை. 20
காதலில் காமங் கழிசிறப் பன்றே. 21
பிரிவினு முண்டோர் பெரும்பட ரின்பம். 22
நினைவினு மின்ப நிகழ்த்திடுங் காதல். 23
பயன்பிற குறித்தது பயனில் முயக்கம். 24
அன்பகத் தில்லா ஆயிழை முயக்கம்
வன்பகை வழக்கினும் வன்கண் மைத்தே. 25
பிரிந்துறு துன்பம் பொருந்திடிற் பல்கும். 26
வீடெனப் படுவது விழைவின் பயனே. 27
இருமையு மிழத்தல் இயல்புடைத் தன்றே. 28
துறவினு நன்றே தூயசிற் றின்பம். 29
புணர்ச்சி நீங்கிற் புகுதுக மெய்ந்நெறி. 30

## வீட்டியல்.

தவமெனப் படுவது தற்காப் பாவது. 1
தவம்புரி யாதா ரவம்புரி பவரே. 2
தருவலி தருவது தவநிலை யென்ப. 3
தவத்தவர் சீற்றந் தாங்குவ தரிதே. 4
வேண்டுவ பயக்கும் விழுத்தவ வொழுக்கம். 5
பிறப்பின் மயக்கம் பிறிப்பது நோன்பு. 6
ஒன்றி னொன்று வொன்றுதல் கடனே. 7
நிலையா வாழ்வி னிலைப்பது பற்றுக. 8
மெய்யுணர் வின்றி வீடுபே றில்லை. 9
உண்மை கண்ட வுரமெனப் படுமே. 10
விட்டவர்க் கில்லை வேந்தும் வினையும். 11
வீட்டின் மிக்கதோ ரீட்ட மில்லை. 12
ஒன்றி னொன்றி னுறுபிறப் பழியும். 13
இருவினை நீங்கிற் றிருநிலை மேவும். 14
மூன்றுடன் மாளி னொன்றுட னெழுமே. 15

நாடார்க் கில்லை நாலு மிரண்டும். 16
ஐந்து மடக்கி னரும்பிறப் பகலும். 17
ஆறு மழியி னுறுதல் பெறுப. 18
ஏழு சுற்றினு மெழுவினை யொழியா. 19
எட்டும் பெற்றவர் கட்டறுத் திடுப. 20
ஒன்பது வாயி லுடனிலை யாதே. 21
அகத்துணர்ந் தொழுகி னருநிலை மேவும். 22
கரண மடங்கின் மரண மடங்கும். 23
செவ்வழி யானே செம்பொரு ளோர்தல். 24
விளங்கிய வறிவி லிலங்குமெய் வீடு. 25
தன்னை யறியிற் பின்னை யறியும். 26
பல்வகை நிலையி லொருநிலை பயில்க. 27
பற்றறு பற்றிற் பற்றுதல் பற்றே. 28
இன்பந் துன்பெனி லியைவது வீடு. 29
மக்கட் பிறப்பில் மாண்பய னெய்துக. 30

முற்றும்.

# அரும்பொருள் விளக்கம்.

## அறம்.

புரிந்த-செய்த; எய்க-பொருந்துக; பொற்பு-அழகு; தமிழ்-இனிமை, தமிழ் நூல்; வளம்-செல்வம்; வழக்கு-செலவு; மனையறம்-இல்லறம்; மரமற்று-மரத்தின் வளர்ச்சி போன்றது; என்பு – எலும்பு; ஓம்பல் – பாதுகாத்தல்; வேள்வி-மனையாகம்; விழுப்பம்-சிறப்பு; கூற்றம்-சொல்; வழக்கு-சொல்லல்; எய்தினும்-அடைந்தாலும்; உவகை-மகிழ்ச்சி; எழில்-அழகு, எழுச்சி; வரை–வரம்பு; கைம்மாறு – எதிருதவி; இன்னாது - துன்பந் தருவது; செப்பம் - நடுவு நிலைமை; இழுக்கு - குற்றம்; விழைதல் - விரும்பல்; அழுக்கறுத்து – பொறாமை கொண்டு; இழுக்குஆறு-குற்றந்தரும் நெறி; வெஃகின்-விரும்பினால்; பிழைக்கும்-தவறும்; கூறுபடுக்கும்–பிரிக்கும், துண்டு படுக்கும்; படிற்றினர்-வஞ்சகர்; பழிஉறை-பழிகளுக்கு இருப்பிடம்; என்ப-என்று சொல்வர்; அலைக்கும்-துன்பப் படுத்தும்; பருவரல்–துன்பம்; பீடு-பெருமை; உறுதவ–மிகமிக; ஓம்பல்-பாதுகாக்க; களர்–உவர் நிலம்; ஒறுப்பினும்-பிறர் தண்டிப்பினும்; ஊதியம்–நன்மை; கடிதல்–நீக்குதல்; ஆபம்–சூதுகருவி; வெகுளி-கோபம்; படை-ஆயுதம்; இன்னா-துன்பம்; இகவா-நீங்கமாட்டா; பேணுதல்-பாதுகாத்தல்; தொல் - பழைய; கழுவினை - கொலை; செகுத்து-கொன்று; மை-குற்றம்; அணங்கு-தெய்வம்; வரைவின் மகளிர்-வேசியர்; வரைதல்-மணத்தல்.

## பொருள்.

கூற்று–இயமன்; கோல்-அரசாட்சி; ஒறுப்பது–தண்டிப்பது; அமைச்சு–மந்திரித் தொழின்மை (படை, குடி, கூழ், அமைச்சியல், நட்பு, அரண் என்பன ஆறும் அரசர்க்கு வேண்டும் என்பது) முறை-நீதி; உழையிருப்பவன்–அமைச்சன்; ஊற்றம்-வலிமை; படு–உண்டாகின்ற, மிக்க; மறம்-வீரம்; வேய்-மூங்கில்; திறல்-வலிமை; பண்பு-

(அரசர்க்கு வேண்டுங்) குணம்; முனையேல்-முற்படாதே; இறுதி-முடிவு; தலைவரும்-உண்டாகும்; அலமரல்-மனச் சுழற்சி; இகக்கும்-நீங்கும்; கடைவழி- இறந்துசெல்லும் நெறி; கவின்-அழகு; கசடு-குற்றம்; ஆன்ற-சிறந்த; வழூ-குற்றம்; கைகொடுத்திடும்-உதவிடும்; பொறை - பாரம்; மடமை-அறிவின்மை; ஆள்வினை-முயற்சி; ஊழ்-விதி; ஈட்டும்-சேர்க்கும்; இடும்பை - துன்பம்; அம்பி - மரக்கலம்; நலிதகை- துன்புறுத்தும் தன்மை; ஒல்லா - பொருந்தாத; கெழுதகை - உரிமை; நல்குரவு - வறுமை; மன்று - சபை; வருத்துவது-துன்புறுத்துவது; இழுக்கு-குற்றம்.

## இன்பம்.

ஏழாமிடம் - பெண்கள் உடலில் அமுதம் நிற்கும் இடத்திற்கு ஏழாமிடம்; அதுவிடம் நிற்கும் இடம் என்ப; கலவி-புணர்ச்சி; புலவி-பிணக்கு; கழி-மிக்க.

## வீடு.

ஒன்று-இறைநிலை; ஒன்றுதல்-பொருந்துதல்; வீடுபேறு-மோட்சம்; உரம்-வலிமை; திருநிலை-வீடுபேறு (சிரேயசென்பது வடமொழி வழக்கு) மூன்று—காமம், வெகுளி, மயக்கம்; நான்கு-அறம், பொருள், இன்பம் வீடு; இரண்டு-இம்மை, மறுமை; ஐந்து-மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்தாலும் நுகரும் இன்பம்; ஆறு-காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம்; ஏழு-ஏழுலகு; எட்டு-இயமம், நியமம், ஆசனம், பிராணாயமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி; கட்டு-பிறவி பத்து-தசவாயுக்கள் (பிராணன் முதலிய வாயுக்கள் பத்து;)

# அறமொழி.

உயிர்.

1 அரும்பொருள் தேடு.
2 ஆராய்ந்து செய்.
3 இசைவது உதவு.
4 ஈட்டி உண்.
5 உலகம் தழுவு,
6 ஊராண்மை உணர்.
7 எதிர்நன்றி செய்.
8 ஏழைக்கு இரங்கு.
9 ஐந்தில் கல்.
10 ஒன்றி ஒழுகு.
11 ஓதி உணர்.
12 ஔவை மொழிபேண்.

மெய்.

13 கல்வி பயில்.
14 ஙகரம் போல்நில்.
15 சமரசம் மேவு.
16 ஞலிவு நீக்கு.
17 இடங்கொள வாழ்.
18 இணங்குவாரொ டிணங்கு
19 தகுதி அறிந்துரை.
10 நட்பு நாடு.
21 பழி அகற்று.
22 மதிப்புடன் வாழ்.
23 இயற்கை நெறிநில்.
24 இரவு மற.
25 இலக்கண நெறிசெல்.

26 வரவறிந் தழி.
27 இழந்தவை நினை
28 இளமையில் முயல்.
29 இறப்பெண்ணி வாழ்.
30 இனமறிந்து சேர்.

**உயிர்மெய்.**

31 கடவுள் கைதொழு.
32 காப்பது சொல்.
33 கிளைஞரைப் போற்று.
34 கீழ்க்குடி உயர்த்து.
35 குறியறிந்து ஒழுகு.
36 கூறுவது கேள்.
37 கெடுதி நீக்கு.
38 கேளிரைத் தழுவு.
39 கைவினை போற்று.
40 கொடுமை அகற்று.
41 கோல்வழி ஒழுகு.
42 கௌவை விலக்கு.
43 ஙப்போல் துணைசேர்.
44 சலமொழி கைவிடு.
45 சார்பு பேண்.
46 சிறந்தவை கடைப்பிடி.
47 சீர்பெற ஒழுகு.
48 சுற்றம் போற்று.
49 சூழ்ச்சி அறி.
50 செப்பம் பெறஉரை.
51 சேரி திருத்து.
52 சையம் எனநில்.
53 சொற்பொருள் தேறு.

54 சோம்பல் ஒழி.
55 சௌரிய மாய்வாழ்.
56 ஞயமொழி பேசு.
57 ஞானம் நாடு.
58 ஞெகிழ்ந்து உருகு.
59 ஞேயம் ஓம்பு.
60 ஞைவது தவறு.
61 ஞொள்குவ தொழி.
62 ஞோன்பு புரி.
63 இடரது விலக்கு.
64 விடாது முயல்.
65 இடிந்தவர்க் கருளு.
66 திடீரென உதவு.
67 இடும்பையில் மகிழ்.
68 இடூசி போலுணர்.
69 இடையறிந்து நட.
70 இணங்கினர்க் கிணங்கு.
71 உணு அளந்துண்.
72 உணிய உழை.
73 இணைபெற ஒழுகு.
74 தமிழ்மொழி போற்று.
75 தாழ்விடந் தாழ்.
76 திருவினைத் தேடு.
77 தீண்டாமை விலக்கு
78 துணிவன துணி.
79 தூய்மை யாயிரு.
80 தெய்வம் ஒன்றே.
81 தேன்போல் பேசு.
82 தையலர்க்குறுதி பேண்.

83 தொகுத்துரை யாடு.
84 தோற்றம் பெறநில்.
85 தௌவை அகற்று.
86 நலம்பல செய்.
87 நாடுகாப் பாற்று.
88 நிலைபெற நில்.
89 நீடுவாழ்ந் திடமுயல்.
90 நுட்பம் உணர்.
91 நூல்வினை போற்று.
92 நெஞ்சத் துறுதிகொள்.
93 நேர்மொழி பேசு.
94 நையினுஞ் செய்வனசெய்
95 நொய்யுரை பொறு.
96 நோயற வாழ்.
97 நௌவெனச் சென்றுழை.
98 பண்பு பாராட்டு.
99 பாடு புகழ்பெறு.
100 பிணக்கம் தவிர்.
101 பீடு பெறு.
102 புதுமை போற்று.
103 பூணணி சுருக்கு.
104 பெண்ணலம் பேண்.
105 பேரவா ஒழி.
106 பைம்புனலாடு.
107 பொல்லாங் ககற்று.
108 போக்கற நுவல்.
109 பௌவம் அஞ்சு.
110 மடிமை கைவிடு.
111 மாலை மாற்று.

112 மிகைபல விட்டொழி.
113 மீன்உணவு அறஒழி.
114 முகமினிதாய் உரை.
115 மூவகைப் பொருள்பேண்.
116 மெய்ப்பொருள் நாடு.
117 மேம்பட ஒழுகு.
118 மைந்தரைப் போற்று
119 மொய்ம்பு கைக்கொள்.
120 மோழைமை நீக்கு.
121 மௌனம் மேவு.
122 இயம நெறிவாழ்.
123 யாவர்க்கும் நன்மைசெய்.
124 உயுத்திப் படவுரை.
125 யூகித்து அறி.
126 யோகநெறி உணர்.
127 யௌகிகம் ஆய்ந்தறி.
128 இரகசியம் அடக்கு.
129 இராவழி அகற்று.
130 உரிமை ஓம்பு.
131 அரீஇய பெறு.
132 அருமை அறி.
133 உரூஉ வகமுணர்.
134 விரைவன விரைந்துசெய்.
135 விரோதம் ஒழி.
136 இரௌரவம் நீக்கு
137 இலங்க மொழி.
138 இலார்க்கு ஈந்திடு
139 இலிகிதம் பயில்.
140 இலீலை ஆய்ந்துசெய்.

141 உலுத்தரை அகன்றொழி.
142 உலூதை போல்முயல்.
143 இலேசு தவிர்.
144 இலையுணை ஓம்பு.
145 உலோபம் ஒழி.
146 இலௌகிகத் திளையந்துவாழ்.
147 வன்மொழி மற.
148 வாய்ப்பன பெறமுயல்.
149 விரும்ப வாழ்.
150 வீடு சேரு.
151 வெளிற்றுரை அகற்று.
152 வேள்வி வினைசெய்.
153 வைவதை ஒழி.
154 வௌவால் வழக்கொழி.
155 உழவு விரும்பு.
156 விழாச்செல வருக்கு.
157 இழிவன இகழ்ந்துவாழ்.
158 உழுவைபோல் ஊக்கு.
159 பிழையுணர்ந் தொழுகு.
160 விளக்கொளிபோல் ஒளிர்.
161 அளாவி உறவுசெய்.
162 இளிவரவு ஒருவு.
163 உளுவினை ஒழி.
164 உளைவன ஒழி.
165 அறநெறி தழுவு.
166 உருவழி மறு.
167 அறிவன அறிந்துகொள்.
168 உறுதி பேண்.
169 இறைவழி பாடுசெய்.

170 அனந்தர் அறு.
171 இனாதன மற.
172 இனியவை கேள்.
173 அனீகம் அஞ்சு.
174 அனுபவத்து அறி.
175 உனை நீ உணர்.

---

## அறவுரை.

### உயிர்.

1 அறத்தை மறவேல்.
2 ஆண்மை பிறழேல்.
3 இரந்து வாழேல்.
4 ஈவது மறவேல்.
5 உறுதி கைவிடேல்.
6 ஊக்கம் அழியேல்.
7 எண்ணம் இகழேல்.
8 ஏங்கித் திரியேல்.
9 ஐயுற் றழியேல்.
10 ஒற்றுமை சிதையேல்.
11 ஓம்படை வழுவேல்.
12 ஔவியம் உரையேல்.

### மெய்.

13 கலக்கம் அடையேல்.
14 ஙகரத்தில் பிறழேல்.
15 சலித்து வருந்தேல்.
16 ஞலிவு பேசேல்.

17 இடநக வாழேல்.
18 இணக்கம் வழுவேல்.
19 தனிசு கொள்ளேல்.
20 தன்மை கைவிடேல்.
21 பழமை நீக்கேல்.
22 மதிகெட்டு மயங்கேல்.
23 இயல்பு சிதையேல்.
24 இரவு விழியேல்.
25 இலக்கியம் இகழேல்.
26 வழுமொழி வழங்கெல்.
27 இழந்ததற்கு இரங்கேல்.
28 இளமை இழவேல்.
29 இறவி அஞ்சேல்.
30 இனங்கெடுத் துய்யேல்.

### உயிர்மெய்.

31 கலந்து பழியேல்.
32 காப்பன கைவிடேல்.
33 கிளையகன் றொழுகேல்.
34 கீழ்களை அணுகேல்.
35 குலமுறை தவறேல்.
36 கூசித் திரியேல்.
37 கெடுத்து வாழேல்.
38 கேள்வி கைவிடேல்.
39 கைகடந் தொழுகேல்.
40 கொலைவினை புரியேல்.
41 கோள்மொழி பகரேல்.
42 கௌவை அஞ்சேல்.
43 ஙவ்வென ஒழுகேல்.

44 சமர மாடேல்.
45 சார்பு தவறேல்.
46 சிறுமை குறுகேல்.
47 சீரழிந் தொழுகேல்.
48 சுற்றம் பழியேல்.
49 சூழ்ச்சி புரியேல்.
50 செய்வன மறவேல்.
51 சேர்ந்திடம் சிதையேல்.
52 சைகைமீச் செயேல்.
53 சொன்மொழி பிறழேல்.
54 சோகெனத் திரியேல்.
55 சௌரியம் பேசேல்.
56 ஞயமற் வாழேல்.
57 ஞாலம் பழியேல்.
58 ஞெகிழ்ந்து நடவேல்.
59 ஞேயம் அகற்றேல்.
60 ஞைதர உரையேல்.
61 ஞொள்கி வாழேல்.
62 ஞோவு செய்யேல்.
63 தஞ்சம் அழியேல்.
64 தாய்மொழி கடவேல்.
65 திண்மை கைவிடேல்.
66 தீயன தொடரேல்.
67 துறப்பன விரும்பேல்.
68 தூங்கித் திரியேல்.
69 தெய்வம் பழியேல்.
70 தேற்றம் அழியேல்.
71 தையலர்ப் பழியேல்.
72 தொற்றி வாழேல்.

73 தோல்விக் கிடங்கொடேல்.
74 தௌவை அழியேல்.
75 நடுநிலை பிறழேல்.
76 நாநலம் அழியேல்.
77 நிலம்பறித் துண்ணேல்.
78 நீதிகை விடேல்.
79 நுகர்ச்சி மகிழேல்.
80 நூழில் ஆட்டேல்.
81 நெஞ்சுதடு மாறேல்.
82 நேயரை மறவேல்.
83 நைந்தறி வழியேல்.
84 நொய்யன பற்றேல்.
85 நோவன பேசேல்.
86 பழிபட வாழேல்.
87 பாழ்வினை செய்யேல்.
88 பிறழ்ந்து திரியேல்.
89 பீடுகை விடேல்.
90 புன்மை புனையேல்.
91 பூம்படை வழங்கேல்.
92 பெருமை கடவேல்.
93 பேயினை வணங்கேல்.
94 பையர வாட்டேல்.
95 பொழுதுபாழ் போக்கேல்.
96 போதம் அழியேல்.
97 பௌவ மாடேல்.
98 மகிழ்ந்து செருக்கேல்.
99 மாண்பு மறவேல்.
00 மிடிபட நில்லேல்.
01 மீப்புகழ் இழவேல்.

102 முரண்பட ஒழுகேல்.
103 மூத்தவர்ப் பழியேல்.
104 மெலிந்து படரேல்.
105 மேதக வழியேல்.
106 மையுற ஒழுகேல்.
107 மொழிநலம் சிதையேல்.
108 மோகத் தழுந்தேல்.
109 வல்லமை இகவேல்.
110 வாய்மை வழுவேல்.
111 விதிதனக் கஞ்சேல்.
112 வீடு மறவேல்.
113 வெளிறு படேல்.
114 வேளாண்மை விடேல்.
115 வைப்பொருள் இழவேல்.
116 வௌவி வாழேல்.

முற்றும்.

தாஸர் பிறஸ், நாகர்கோவில்.

# பண்டித இராமசுப்பிரமணிய நாவலர் எழுதியவை.

ஞான இரகசிய சிந்தாமணி:- உயரிய வேதாந்த நூல்களின் கருத்துக்களைத் தொகுத்துச் செவ்வையாக எளிய நடையில் விளக்கிக் காட்டுவது. [விலை அணா 8.

தமிழின் தற்கால நிலைமை:- செந்தமிழின் சிறப்பை நயம்பட உயரிய நடையில் கற்போர் உள்ளம் இன்பம் எய்தக் கட்டுரைப்பது. தமிழ்ப்பற்று உடையோர்க்கு இஃது ஓர் அருங்கலமாகும் [விலை அணா 6

ஆத்திசூடி உரை:- பதவுரை விசேட உரைகளுடன் சிறந்த நீதிகளை விளக்குவது. [விலை அணா 4.

கலைசைச் சிலேடை வெண்பா உரை:- இருபொருள் பொருந்திய சொற்கட்டும் பொருள் இனிமையும் வாய்ந்தது. பதவுரை விசேட உரைகளுடன் கூடியது. [விலை அணா 6

இலக்கியக்கட்டுரை:- பல்வகை அலங்காரங்கள் மிளிர்ந்து இலங்கிட இன்பம் துளிக்கும் கட்டுரைகள் அடங்கியது. உயரிய இனிய செந்தமிழ் நடையில் விளங்குவது. [விலை அணா 6

நரி விருத்த ஆராய்ச்சி:- சீவக சிந்தாமணி ஆசிரியர் திருத்தக்க தேவரால் இயற்றப்பட்ட நரி விருத்தம் என்னும் அழகிய சின்னூலைப் பற்றியதோர் சிற்றாராய்ச்சி. [விலை அணா 2.

கனாவுலகு:- மலைநாட்டு நிலைமையும் ஒழுக்கமும் விளங்கச் சீரிய செந்தமிழ் நடையில் இலக்கிய நயம் தோன்ற இலங்கும் ஓர் புனைந்துரை. [விலை அணா 2

முத்தமிழ்வாணர்:- இஃது சங்கத்துச் சான்றோராகிய கபில பரண நக்கீரர்களுடைய வரலாறும் அவர்களது பாடல் நயமும் செவ்விய நடையில் விளக்கும் ஓர் அருமந்த தமிழ் மணிக்கலன் [விலை அ 8

கட்டுரை விளக்கம்:- மாணவர்களுக்குரிய சிறிய கட்டுரைகளை உடையது. [விலை அணா 2

அணிகலன்:- காவிய அழகுகளை மேற்கோள்களுடன் விளக்குவது. [விலை அணா 2

**அதிவீரராம பாண்டியன்:**-புலிராயனும் கவிராயனுமாய் விளங்கிய இப்பாண்டியன் சரிதையை ஆராய்ச்சியுடன் கூறுவது. இவர் எழுதிய புலவர்க்கு ஔடதமாகிய நைடதத்தின் வரலாறு படிப்பார்க்கு இன்பம் விளைக்கும். [விலை அணா 2

## தமிழ் விளக்கு.

இப்பெயர் பூண்ட செந்தமிழ்ப் பத்திரிகை தமிழர்க்கு ஓர் விருந்து. இலக்கியக் கட்டுரைகளும் இனிய பாடல்களும் இதில் மிளிர்கின்றன. இதில் வரும் பகுதிகள் தனிப் புத்தகங்களாகும். வருடம் நான் முறை.

வருட சந்தா ரூ. 3. மாதிரிப் பிரதி ரூ. 1.

[முன் பணம் அனுப்பிப் பெறவேண்டும்.]

**செந்தமிழ் நிலையம்,**

பதுமநாபபுரம்,

தக்கலை P. O.